# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாணவ - மாணவியர்களின் உற்சாக வரவேற்பில் முதல்வர்!









திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம்(9.7.2025) நடைபெற்ற ஜமால் முகமது கல்லூரியின் பவளவிழா ஆண்டின் தொடக்க விழா மற்றும் குளோபல் ஜமாலியன்ஸ் பிளாக் கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாணவ, மாணவியர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில்

## ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள்!

### பணியினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 11-

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில் சுற்றுலாத் துறையின் சார்பில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் 2024-25 ஆம் ஆண்டு வரவு செலவு கூட்டத்தொடரில் அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதிகளில் ரூ.1.38 மதிப்பீட்டில் கழிவறைகள், பேவர் பிளாக் சாலை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம், தேவலாயப் பகுதி நுழைவு வாயில், R.O.Plant, குழந்தைகளுக்கான விளையாட்டு வசதிகள், தெரு விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதியில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்றையதினம் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்கள் இன்றையதினம் வேலைநிறுத்தத்தில் ஈடுப்பட்டு வருகிறார்கள் ஆனால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் பேருந்துகள் அனைத்து இடங்களிலும் வழக்கம் போல் இயக்கப்பட்டு பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி பயணம் மேற்கொண்டு வருகின்றனர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதவி சுற்றுலா அலுவலர் வரதராஜன், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலய பாதிரியார் தங்கசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.கென்னடி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.முருகேசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இலக்கியதாசன், அரியலூர் சட்டமன்ற தகவல்தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுபாஷிணி, மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில் சுற்றுலாத் துறையின் சார்பில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.




சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியத்தில் "ஓரணியில் தமிழ்நாடு". புதிய உறுப்பினர் சேர்க்கையை. மாவட்ட கழக செயலாளர். . அமைச்சர்.இரா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர். கே.சி. அறிவழகன் பேரூர் கழக செயலாளர். கே.ஆர். பிரபாகரன். பெருமாள். இலட்சுமணன், முருகன். பேரூர் கழக நிர்வாகிகள்.முத்து. சிவக்குமார். தூயவன்.செல்வம். பழனிசாமி உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க திருப்பூர் மத்திய மாவட்டம், தெற்கு சட்டமன்ற தொகுதி, கருவம்பாளையம் பகுதி, 36வது வார்டு, பாகம் எண் 64ல் வீடு வீடாகச் சென்று "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கையில் மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் ஈடுபட்டனர். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், தொகுதி பார்வையாளர் ராம்குட்டி (எ) ராமமூர்த்தி, பகுதி செயலாளர்கள் மியாமி ஆ.அய்யப்பன், மு.க.உசேன், மாவட்ட துணை செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், வழக்கறிஞர் சி.நந்தினி, மாநகர துணைச் செயலாளர் பி.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் சலீம், வட்டக் கழக செயலாளர் மு.நந்தகோபால் உள்பட பலர் உள்ளனர்.